10ஆம் வகுப்பு

# உடனடித்தேர்வு - ஜுன் - 2023

## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

(வினாத்தாள் விடைகளுடன்)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்

**குறிப்புகள் :** (i) இவ்வினாத்தாள் **ஐந்து** பகுதிகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு :**

(i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். [15 × 1 = 15]

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது :
   அ) வணிகக்கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
   ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. பின்வருவனவற்றுள் முறையான தொடர்
   அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
   ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
   இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
   ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

3. 'செங்காந்தள்' - என்ற சொல்லில் அமைந்துள்ள தொகையைத் தேர்க.
   அ) உவமைத் தொகை ஆ) பண்புத் தொகை
   இ) உம்மைத் தொகை ஈ) வேற்றுமைத் தொகை

4. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
   அ) வானத்தையும் பாட்டையும்
   ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும்
   ஈ) வானத்தையும் பேரொலியையும்

5. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
   அ) தமிழ் ஆ) அறிவியல்
   இ) கல்வி ஈ) இலக்கியம்

6. கரகாட்டத்தைக் 'கும்பாட்டம்' என்றும் 'குடக்கூத்து' என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?
   அ) கரகாட்டம் என்றால் என்ன?
   ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
   இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை?
   ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

7. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
   அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
   இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

8. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ..................
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு
   இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

9. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.........
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
   இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

10. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
    அ) அகவற்பா ஆ) வெண்பா
    இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

11. ஓர் ஆண்டின் மொத்த மாதங்களின் எண்ணிக்கையினைக் குறிக்கும் தமிழ் எண் தேர்ந்தெடுக்க.
    அ) கரு ஆ) கஉ இ) கங ஈ) கச

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"சக்தி குறைந்துபோய், அதனை அவித்துவிடாதே.
பேய்போல வீசி அதனை மடித்துவிடாதே.
மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம்
நின்று வீசிக் கொண்டிரு.
உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்."

12. இப்பாடலில் இடம் பெற்றுள்ள 'லயத்துடன்' என்ற சொல்லின் பொருள்:
    அ) சுழலாக ஆ) கடுமையாக
    இ) சீராக ஈ) வேகமாக

13. பாடலில் இடம் பெற்றுள்ள இயைபுச் சொற்களை தேர்க
    அ) அவித்து விடாதே, நெடுங்காலம்
    ஆ) மடித்து விடாதே, பாடுகிறோம்
    இ) மெதுவாக லயத்துடன்
    ஈ) பாடுகிறோம், கூறுகிறோம்

14. இக்கவிதையை இயற்றியவர்
    அ) திரு.வி.க ஆ) பாரதியார்
    இ) பாரதிதாசன் ஈ) மு.மேத்தா

15. 'நெடுங்காலம்' என்ற சொல்லைப் பிரித்தால் கிடைப்பது....
    அ) நெடுமை + காலம் ஆ) நெடிய + காலம்
    இ) நெடு + காலம் ஈ) நெடுங் + காலம்

### பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **21–வது வினாவிற்குக் கட்டாயமாக** விடையளிக்கவும். [4 × 2 = 8]

16. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
    அ) 'தமிழாதுள்ளி எழு' என்னும் தலைப்புடைய துண்டறிக்கையை கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே ம.பொ.சி. வழங்கினார்.
    ஆ) விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரமே திருக்குறளில் அமைந்திருக்கிறது.



enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

18. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

19. 'தஞ்சம் எளியன் பகைக்கு' - இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

20. 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு தொடர்களை எழுதுக.

21. 'எப்பொருள்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். [5 × 2 = 10]

22. கலைச்சொல் தருக.
அ) Vowel ஆ) Emblem

23. 'கிளர்ந்த' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.
பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன்.
- ம.பொ.சி.

25. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

26. சந்தக் கவிதையில் பிழைகளைத் திருத்துக.
"தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே"

27. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப் படுத்துக.

28. மரபுத்தொடரைப் பொருத்தமான தொடரில் அமைத்து எழுதுக.
அ) அள்ளி இறைத்தல் ஆ) ஆறப் போடுதல்

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். [2 × 3 = 6]

29. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதைக் குறித்து எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள் வரை மொழி பெயர்க்கப்படுகின்றன. புள்ளி விவரப்படி அதிகமான தமிழ் நூல்கள் பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம், இரண்டாமிடம் மலையாளம். மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழி வளம் ஏற்படுகிறது.
அ) ஜெர்மனியில் ஓர் ஆண்டில் எத்தனை நூல்கள் வரை மொழி பெயர்க்கப்படுகின்றன?
ஆ) தமிழ் நூல்கள் எந்த மொழியில் அதிக அளவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?
இ) மொழிபெயர்ப்பின் பயன் என்ன?

31. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **34–ஆவது கட்டாயமாக** விடையளிக்க வேண்டும். [2 × 3 = 6]

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்குக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34. அடிபிறழாமல் எழுதுக.
அ) "அன்னை மொழியே" - எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல். **அல்லது**
ஆ) "தூசும் துகிரும்" எனத்தொடங்கும் சிலப்பதிகாரச் செய்யுள்.

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். [2 × 3 = 6]

35. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு. - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

36. தற்குறிப்பேற்ற அணியினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். [5 × 5 = 25]

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. **அல்லது**
ஆ) பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

39. அ) உங்கள் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றவும் புதை சாக்கடையைத் தூர்வாரவும் வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக. **அல்லது**
ஆ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40. காட்சியை கண்டு கவினுற எழுதுக.



41. எண்.46, திரு.வி.க. தெரு கடம்பவனம், நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழினியன் என்பவரின் மகன் இளஞ்செழியன் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்தார். இளஞ்செழியன், கடம்பவனம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலை வகுப்பு சேருவதற்குக் கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

www.Padasalai.Net

https://www.Padasalai.Net www.Padasalai.Net    https://bit.ly/3ispUm0 www.CBSEtips.in



**42.** அ) இன்சொற்களைப் பேசுவதால் விளையும் நன்மைகள் ஐந்தினைப் பட்டியலிடுக. **அல்லது**

ஆ) மொழிபெயர்க்க :

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான** விடையளிக்கவும். [3 × 8 = 24]

**43.** அ) காற்று மாசு அடைவதைப் போன்று நிலம் மாசு அடைவதை விவரித்து எழுதுக. **அல்லது**

ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்று எழுதுக.

**44.** அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. **அல்லது**

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

**45.** அ) குறிப்புகளைக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. குறிப்புகள்: முன்னுரை - தமிழன்னையின் அணிகலன்கள் - தமிழ்ச் சான்றோர் - தமிழின் வளர்ச்சி - தமிழின் எதிர்காலம் - முடிவுரை. **அல்லது**

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பிடுக. குறிப்புகள்: முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துக்களைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.

## விடைகள்

1. அ) வணிகக்கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
2. இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
3. ஆ) பண்புத் தொகை
4. ஈ) வானத்தையும் பேரொலியையும்
5. இ) கல்வி
6. ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
7. அ) வேற்றுமை உருபு
8. ஈ) சிலப்பதிகாரம்
9. இ) எம் + தமிழ் + நா
10. அ) அகவற்பா
11. ஆ) கஉ
12. இ) சீராக
13. ஈ) பாடுகிறோம், கூறுகிறோம்
14. ஆ) பாரதியார்
15. அ) நெடுமை + காலம்
16. **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்கள்:**
    - வாருங்கள்; அமருங்கள்
    - தண்ணீர் அருந்துங்கள்!
    - உங்களைப் பார்த்து நீண்ட நாட்களாகி விட்டதே! எப்படி இருக்கிறீர்கள்?
    - உங்கள் வீட்டில் அனைவரும் நலமா?
    - உணவு உண்ணலாம் வாருங்கள்!
17. அ) 'தமிழா! துள்ளி எழு!' என்ற துண்டறிக்கையை கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியவர் யார்?

    ஆ) விருந்தோம்பலை வலியுறுத்தும் ஓர் அதிகாரம் எதில் அமைந்திருக்கிறது?
18. **'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – தொடர் உணர்த்தும் பொருள்:** தினைச் சோற்றை உணவாகப் பெறுவீர்கள்.
19.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| தகு/சம் | நேர் / நேர் | தேமா |
| எளி/யன் | நிரை / நேர் | புளிமா |
| பகைக்/கு | நிரைபு | பிறப்பு |

20. ■ மரங்களை வளர்த்திடு! காற்றெனும் வரப்பிரசாதம் பெற்றிடு!

    ■ காற்று மாசை ஒழித்திடுவோம்!
    தூய காற்றைச் சுவாசித்திடுவோம்!
    நோயற்ற வாழ்வு வாழ்ந்திடுவோம்!
21. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.
22. அ) உயிரெழுத்து ஆ) சின்னம்
23. **கிளர்ந்த – கிளர் + த்(ந்) + த் + அ**

    கிளர் - பகுதி

    த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்

    த் - இறந்தகால இடைநிலை

    அ - பெயரெச்ச விகுதி
24. "பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன்."

    - ம.பொ.சி.
25. ■ பாரதியார் கவிஞர் - பெயர்ப் பயனிலை

    ■ நூலகம் சென்றார் - வினைப் பயனிலை

    ■ அவர் யார்? - வினாப் பயனிலை.
26. "தே**னி**லே **ஊறி**ய செந்தமிழின் - சுவை
    தே**று**ம் சிலப்பதி கார**ம**தை
    **ஊனி**லே எம்முயிர் **உள்ள**ளவும் - நிதம்
    ஓதி **யுண**ர்ந்தின் **புறு**வோமே"
27. ■ வெட்சி × கரந்தை

    ■ வஞ்சி × காஞ்சி

    ■ நொச்சி × உழிஞை

    ■ தும்பை × வாகை

    ■ பாடாண் × பொதுவியல்

    ■ கைக்கிளை × பெருந்திணை
28. அ) உழைக்காமல் பெற்ற பணத்தைச் சிக்கனமாக செலவு செய்யாமல் அதற்கு இதற்கு என்று **அள்ளி இறைத்தான்** முருகன்.

    ஆ) எச்செயலையும் **ஆறப்போடாமல்** உடனுக்குடன் செய்து முடிக்க வேண்டும்.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

www.Padasalai.Net www.CBSEtips.in



29. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பது குறித்துக் காண்போம்.

**அரசியல் அறம் :** நீர் நிலை பெருக்கம், நிலவளம், உணவுப் பெருக்கம், அரசின் கடமையாகச் சொல்லப்படுகிறது. அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்ற சங்க இலக்கியம் காட்டும் அறம் இன்றைக்கும் தேவையே.

**இன்றைய தேவை :** நீர்நிலை, நிலவளம், உணவுப் பெருக்கம் குறைந்தால் பஞ்சம், வறுமை ஏற்படும். கையூட்டுப் பெற்றுக் கொண்டு முறைதவறி நீதி கூறினால் நாடு கெடும் என்பதால் அவை இன்றைக்கும் தேவையே.

**போர் அறம் :** சங்க இலக்கியத்தில் கூறப்பட்டதைப் போன்று, வலிமை கொண்ட நாடு, வலிமை, வளம் அற்ற நாடுகளோடு போர் செய்தலைத் தவிர்க்க வேண்டும். இயற்கை, விலங்கு, மனிதம் காக்கப்பட வேண்டும்.

**வணிகம் :** வணிகத்தில் கூடுதல் விலை, கலப்படம், தரமற்ற பொருள்கள் போன்றவற்றை தவிர்த்து, மக்கள் நலம், வளம் சார்ந்து வணிகம் நடைபெற வேண்டும்.

**உதவி :** பிறர் துன்பம் தீர்ப்பதுதான் உண்மையான செல்வம். தனிநபர், நாடு, அரசியல் அமைப்புகள் போன்றவை வறுமை உற்றோர்க்கும், பிறருக்கும் உதவி செய்து வாழவேண்டும்.

30. அ) ஜெர்மனியில் ஓர் ஆண்டில் 5000 நூல்கள் வரை மொழிபெயர்க்கப்படுகின்றன.

ஆ) தமிழ் நூல்கள் ஆங்கிலம் மொழியில் அதிக அளவில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இ) புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது.

31.
- மனிதனை மேம்படுத்தும் அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதன் செய்ய முடியாத பல ஆக்கப்பூர்வமான பணிகளை அறிவியல் கண்டுபிடிப்புகள் செய்கிறது.
- அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியைக் காண செயற்கை நுண்ணறிவு உதவுகிறது.
- உலகளாவிய வணிகத்திற்கும் தேடுதலுக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகள் துணையாக நிற்கின்றன.
- மனித இனத்தை இயற்கை, நோய் மற்றும் பிற அழிவுகளிலிருந்து காக்க அறிவியல் கண்டுபிடிப்புகள் பேருதவியாக உள்ளன. மனித உழைப்பையும், நேரத்தையும் மிச்சப்படுத்தி, சராசரி ஆயுளைக் கூட்டுகிறது.

32. பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த குலேசபாண்டியன் என்னும் மன்னனது அவையில் கபிலரின் நண்பரான இடைக்காடனார் என்னும் புலவர் தாம் இயற்றிய பாடலை பாட அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான். மனம் வருந்திய இடைக்காடனார் இறைவனிடம் முறையிட்டார். மன்னனின் பிழையை உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோயிலை விட்டு நீங்கி வையை ஆற்றின் தெற்கே சென்று தங்கினார். இதை அறிந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டி இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான்.

**சிறப்புச் செய்த விதம் :** மன்னனது மாளிகை, வாழையும், கமுகும், சாமரையும், வெண்ணிற மேல்விதானமும், விளக்கும் உடையது. அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை பூரண கும்பம் கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது. போற்றத்தக்க ஒளியுடைய மணிகள் பதிக்கப் பெற்றது. அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான். பிறகு புலவர்களை நோக்கி, "புண்ணிய வடிவான புலவர்களே, நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று பணிந்து வணங்கினான்.

33. **அறியேன் என்று கருணையன் கூறுவன :**
- 'நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.
- நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்.
- உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன்.
- காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன்.
- என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன்' என்று கருணையன் கூறுகிறார்.

34. அ) அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

**– பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆ) தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்; **– இளங்கோவடிகள்**

35.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கரு/வியும் | நிரை நிரை | கருவிளம் |
| கால/மும் | நேர் நிரை | கூவிளம் |
| செய்/கை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| செய்/யும் | நேர் நேர் | தேமா |
| அரு/வினை/யும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| மாண்/ட | நேர் நேர் | தேமா |
| தமைச்சு | நிரைபு | பிறப்பு |

36. **அணி விளக்கம் :** இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**சான்று :** 'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட'

**பாடலின் பொருள் :** கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல, கை காட்டியது என்பது பொருள்

**அணிப்பொருத்தம் :** கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால், இளங்கோவடிகள், கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள் கையை அசைத்து, 'இம்மதுரைக்குள் வரவேண்டா' என்று தெரிவிப்பதுபோலக் காற்றில் அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார். இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

37. இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோள் ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

**விளக்கம் :** பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைவது ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

https://www.Padasalai.Net https://bit.ly/3impUm0 www.CBSEtips.in



**பொருத்தம் :** முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருக செய்யும். முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும். குறட்பா தொடக்கம் முதல் முடிவு வரை நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளதால் ஆற்றுநீர்ப் பொருள்கோளாயிற்று.

38.

அ) **முன்னுரை :**

**தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் – இன்பத்**
**தமிழ் எங்கள் அசதிக்கு சுடர்தந்த தேன்!**

என்ற பாவேந்தரின் தமிழ்ப்பற்றைப் போற்றி வணங்குகிறேன். அனைவருக்கும் வணக்கம். தமிழ்த்தாய் இன்று, நேற்றுப் பிறந்தவள் இல்லை, என்று தோன்றியவள் என்று கூறமுடியாத அளவிற்கு பழமையும் சிறப்பும் வாய்ந்தவள். அத்தகைய தமிழ் அன்னையைப் பாடாத புலவரில்லை. இங்கு மனோன்மணீயம் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பாவலரேறு அவர்களின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு பார்ப்போம்.

**பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து:** அலைவீசக்கூடிய கடலையே ஆடையாக அணிந்திருக்கிறது இந்த நாடு. இந்த நாட்டை பெண்ணாக உருவகம் செய்கிறார். அப்பெண்ணின் நெற்றியிலிட்ட திலகம் மணம் வீசுவதாக கூறுகிறார். உலகிற்கு பாரத நாடு முகமாகத் திகழ்வதாகக் கூறுகிறார். இந்திய நாட்டிற்கு, தென்னாடும் அதிலும் சிறந்த தமிழர்களின் நல்ல திருநாடாகவும் தமிழ்நாடு விளங்குகிறது என்கிறார். அந்தத் திலகத்தில் இருந்துவரும் வாசனைபோல அனைத்து உலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத்திசையிலும் புகழ் மணக்கும்படி இருக்கின்ற பெருமை மிக்கது தமிழ்ப்பெண்னே என்று தெய்வத்திற்கு இணையாகப் போற்றுகிறார். இன்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பானத் திறமையை வியந்து எங்கள் செயலை மறந்து வாழ்த்துகின்றோம் என்கிறார் மனோன்மணீயம் சுந்தரனார்.

**பாவலரேறு தமிழ் வாழ்த்து :**

- பெருஞ்சித்திரனார் தமிழைப் பழமைக்குப் பழமையாய் தோன்றியவள் என்று பாடுகிறார்.
- கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து நின்று அரசாளும் பேரரசு என்கிறார்.
- பாண்டியனின் மகளாகவும் திருக்குறளின் பெருமைக்குரியவளாகவும் போற்றுகிறார்.
- எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்று இலக்கியங்களையும் காப்பியங்களையும் தன்னுள் கொண்டவள் என்று பாடுகிறார்.
- இறுதியாக, வியக்கத்தக்க அளவிலான நீண்ட காலம் நிலைத்து நின்று எல்லோரும் புகழும்படியாக இருக்கிறது தமிழ். அதைக் கேட்கும் போது மலரில் தேனைக் குடித்துவிட்டு சிறகசைத்துப்பாடும் வண்டினைப் போல் உன்னையும் சுவைக்கிறேன் என்கிறார். அதனால் எங்கள் உள்ளத்தில் இன்பத்தீ பொங்கிஎழ உன் சிறப்புகளை எல்லாத்திசைகளிலும் முழங்குகின்றோம் என்று பாடியுள்ளார்.

**முடிவுரை:** இவ்வாறு தமிழின் பெருமை, பழமை, சிறப்பு, வியப்பு என எல்லாவற்றையும் மனோன்மணீயம் பெ.சுந்தரனார் அவர்களும் பெருஞ்சித்திரனார் அவர்களும் தமிழின் பெருமையைப் போற்றி வாழ்த்துகின்றனர்.

**அல்லது**

ஆ) **பகையை எதிர்கொள்ளல் :** சுற்றத்தாரிடம் ஒருவர் அன்பு இல்லாமலும் பொருந்திய துணை இல்லாமலும் வலிமை இல்லாமலும் இருந்தால் அவர் பகைவரின் வலிமையை எதிர் கொள்ள முடியாது.

**பகையை ஆட்படல் :** மனத்தில் துணிவு இல்லாதவராய், அறிய வேண்டியவற்றை அறியாதவராய்ப் பொருந்தும் பண்பு இல்லாதவராய், பிறர்க்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.

39.

அ) **அனுப்புனர்**

கா. அன்பழகன்
10, முல்லை நகர்,
அம்பத்தூர், சென்னை - 600 053.

**பெறுநர்**

நகராட்சி ஆணையர்
நகராட்சி அலுவலகம், அம்பத்தூர்.

ஐயா,

**பொருள் :** மழைநீரை அகற்றவும் புதை சாக்கடையைத் தூர்வாரவும் வேண்டி.

வணக்கம். நான் மேற்கண்ட முகவரியில் பத்து வருடங்களாக வசித்து வருகிறேன். எங்கள் பகுதியில் மழைநீர் வெளியேற வழியில்லாமல் அதிகம் தேங்கியுள்ளது. மேலும் புதை சாக்கடையில் அவ்வப்போது கழிவுப் பொருட்கள் தேங்கி மழைநீர் செல்ல வழியின்றி அடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் தெருக்களில் மழைநீர் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது. தெருக்களில் வசிக்கும் மக்கள் அதிகளவில் துன்பப்படுகின்றனர். எனவே தேங்கிய மழைநீரை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் புதை சாக்கடையைத் தூர் வார வேண்டும் என்றும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
கா.அன்பழகன்

**உறைமேல் முகவரி**

| |
|---|
| பெறுநர் |
| நகராட்சி ஆணையர் |
| நகராட்சி அலுவலகம்,அம்பத்தூர். |

**அல்லது**

ஆ) காந்தி தெரு,
29.6.20xx

அன்புள்ள கபிலனுக்கு,

வாழ்க வளமுடன்,மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றதற்கு வாழ்த்துகள்.

மரம் வளர்ப்பதால் ஏற்படும் பயன்களை நீ கட்டுரையில் மிகச் சிறப்பாகக் கூறியிருந்தாய், உயிரினங்கள் பூமியில் வாழ மரங்கள் எந்த அளவிற்கு உதவுகின்றன என அறிந்து கொண்டேன். மேலும் மரத்தை அழிப்பதால் ஏற்படும் தீங்குகளையும் பட்டியல் இட்டிருந்தாய், மிகச் சிறப்பு, உனது சிந்தனை ஆற்றலும், சமுதாய அக்கறையும் மேலும் மேலும் ஓங்க என் வாழ்த்துகள்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' இத்தொடரை நீ மெய்ப்பித்தாய்! 'சித்திரமும் கைப்பழக்கம்' இதை நீ சிரமேற்கொண்டாய்! வெற்றியும் பெற்றாய்! உன் அறிவுப் பெருக்கத்திற்கேற்ற பரிசினைப் பெற்றாய்! இப்பயணம் தொடரட்டும்! என்றென்றும் உன்புகழ் வளரட்டும்!

என்றும் அன்புடன்
உ உ உ

**உறைமேல் முகவரி**

| |
|---|
| பெறுநர் |
| கபிலன், |
| 15, அண்ணா நகர், சென்னை - 40 |

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
www.Padasalai.Net

https://www.Padasalai.Net https://bit.ly/3iupUm0 www.CBSEtips.in



40. அறிவியல் விந்தையாகவும்
ஆடம்பரக் குறியீடாகவும்
இயந்திர நண்பனாகவும்
ஈறிலா தரவுகளையும் தந்து
உலகத்தை எந்தன் கையில் கொடுத்தாய் - நீ வந்ததும்
ஊரும் மறந்தேன் உலகம் மறந்தேன் உறவுகள் தவிர்த்தேன்
எந்தன் அடிமைத்தனம் என்று மாறுமோ?
ஏங்கித் தவிக்கும் உறவுகள் நட்புகள்!
செல்பேசி - என்று பெயர் வைத்தது யார்?
சென்றுவிட்டது உறவுகள் மட்டுமல்ல!
எத்தனை எத்தனை இழப்புகள்! - இதிலிருந்து
மீண்டு வருவேனா! உன்னால்
அழிந்த சிட்டுக்குருவியைக் காண்பேனா?

41. **மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண் : 10296 தேதி : 15.6.20xx

வகுப்பும் பிரிவும் : 11-அ

1. மாணவ/ மாணவியின் பெயர் : இளஞ்செழியன்
2. பிறந்த தேதி : 19.5.2007
3. தேசிய இனம் : இந்தியன்
4. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் : வெற்றிச்செல்வன்
5. வீட்டு முகவரி : எண் -46, திரு.வி.க. தெரு, கடம்பவனம், நீலகிரி.
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : பத்தாம் வகுப்பு
7. பயின்ற மொழி : தமிழ்
8. பெற்ற மதிப்பெண்கள் : 490/500
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அரசு மேல்நிலைப் பள்ளி, கடம்பவனம், நீலகிரி.

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப் பெண் (100) |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 620 085 | தமிழ் | 99 |
| பொதுத் தேர்வு 2022 | | ஆங்கிலம் | 95 |
| | | கணக்கு | 100 |
| | | அறிவியல் | 100 |
| | | சமூக அறிவியல் | 96 |
| | | மொத்தம் | 490 |

42.

அ) **இன்சொற்களைப் பேசுவதனால் விளையும் நன்மைகள்:**

- பிறர் மனம் மகிழும்
- அறம் வளரும்
- புகழ் பெருகும்
- நல்ல நண்பர்கள் சேருவர்
- அன்பு நிறையும்

**அல்லது**

ஆ) கிராமிய கலைஞர்களால் தெருவில் இசை நாடகம் போல் நடத்தப்படுவதே தெருக்கூத்து. இதில் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் இன்னபிற பழங்கால புராணங்களிலிருந்தும் கதைகளை, நிறைய பாடல்களுடன் நாடகமாக்கம் செய்து, சூழ்நிலைக்கேற்ப வசனங்களை சேர்த்து கலைஞர்கள் மெருகேற்றி நடிப்பார்கள். பதினைந்திலிருந்து இருபது கலைஞர்கள் ஒரு குழுவாக ‘கூத்து குழு’ ஒன்றை அமைத்து இதை நடத்துவார்கள். குழுவுக்கென ஒரு பாடகர் இருந்தாலும், அனைவருமே தங்கள் குரலில் பாடுவார்கள். இதில் பங்கேற்கும் கலைஞர்கள் மிக கனமான உடைகளும், ஆபரணங்களும் அணிந்து கனமாக முகப்பூச்சும் அணிந்து இதில் பங்கு கொள்வார்கள். இந்த கூத்துக் கிராமப்புறங்களில் மிகவும் பிரபலமாகும்

43.

அ) நிலத்தை பயன்பாட்டின் அடிப்படையில் நன்செய் நிலம், புன்செய் நிலம் என்று நம் முன்னோர்கள் வகைப்படுத்தியுள்ளனர். ஆனால் இப்போது நாம் வாழும் நிலப்பகுதி விவசாயத்திற்கு ஏற்றதாக இல்லை. எல்லாப் பகுதியும் களர் நிலமாக மாறி வருகிறது. நிலம் மாசடைவதற்கு முக்கிய காரணமாக மக்களாகிய நாம் தான் முதலில் இருக்கிறோம்.

தொழிற்சாலைக் கழிவுகள் முக்கிய காரணியாக உள்ளது. அதிக விளைச்சலைக் காண வேண்டும் என்று விவசாயிகள் இரசாயன வேதி உரங்களை அதிகம் பயன்படுத்துவதால் விவசாய நிலம் பாதிப்படைகின்றது. செயற்கை பூச்சிக்கொல்லிகள் இடுவதால் மண்ணின் தன்மை கெடுகின்றது.

பயன்படுத்து “தூக்கியெறி” இந்த மந்திரத்தை நாம் ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டு நெகிழிப் பொருட்கள் மற்றும் பாலித்தீன் பைகள் போன்றவற்றை பயன்படுத்தி தூக்கியெறிகின்றோம். இவை மண்ணோடு மக்கிப் போகாது என அறிந்தும் அதிகம் பயன்படுத்துகிறோம். இவைகள் மண்ணில் மக்கிப் போகாமல் அதில் உள்ள இரசாயனங்கள் மண்ணோடு கலந்து மண்ணில் சத்துகள் அழிந்து விடுகின்றன.

இயற்கை உரங்களை பயன்படுத்தி விவசாயம் செய்ய வேண்டும். சிறந்த களைக்கொல்லிகளை பயன்படுத்த வேண்டும். தொழிற்சாலைக் கழிவுகளை சுத்திகரித்து நிலத்தில் வெளியேற்ற வேண்டும். இது போன்று செயல்படுத்தினால் நிலம் மாசடையாமல் காப்பாற்ற முடியும்.

**அல்லது**

ஆ) **முன்னுரை :** தோலில் செய்த வெட்டு வரைபடங்களை, விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்தி, கதைக்கேற்ப மேலும் கீழும் பக்கவாட்டிலும் அசைத்தும் உரையாடியும், பாடியும் காட்டுவது பொம்மலாட்டமாகும். இத்தகைய பொம்மலாட்டம் வழி நெகிழிப்பைகளின் தீமைகளைக் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் எடுத்துக்கூறிய கலைஞர்களுக்கு பாராட்டுகள்.

**பாராட்டுகள்:** நெகிழிப் பொருட்களைப் பயன்படுத்துவதால் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் நோய்கள் பரவுகின்றன. நிலம், நீர், காற்று ஆகியவை மாசுபடுகின்றன. இவற்றைத் தடுத்து இக்கலையின் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்தியமைக்கு எனது பாராட்டுகள்.

**நெகிழியின் தீமைகள் :**

- நெகிழியைக் கால்நடைகள் உண்பதால் உணவுக்குழல் பாதிப்படைகிறது. குப்பையாக மண்ணில் போடுவதால் மண்ணுக்கும் கேடு விளையும் விளைச்சலும் குறையும்.
- மழைநீர் ஊடுருவ வழியின்றி நிலத்தடி நீர் குறைந்துவிடும். கழிவு நீர் கால்வாய்களை அடைத்து விடுவதால் கழிவு நீர் மற்றும் குப்பைகள் தேங்கி நோய்கள் உண்டாகும்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- மனிதர்களுக்கு மூச்சுத்திணறல், குடல்புண், சிறுநீரகக் கோளாறு போன்ற பல்வேறு விதமான நோய்களும் ஏற்படுகிறது.
- இதைப் போன்ற நிகழ்வுகளை பொம்மலாட்டத்தின் வழியாக எடுத்துக் கூறியது வியப்புக்கும் பாராட்டுதலுக்கும் உரியது.

**மாற்று ஏற்பாடு :**

- நெகிழியால் ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்க ஒரே வழி, மாற்றுப் பயன்பாட்டைக் கொண்டுவருவது.
- பொருட்களை வாங்க துணி, சணல், பைகளைப் பயன்படுத்த வேண்டும்.
- எழுதுகோல், வீட்டு உபயோகப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள் போன்ற தினசரி பயன்பாட்டில் நெகிழியைத் தவிர்த்தல் வேண்டும்.
- உணவுகளைப் பொட்டலங்கள் கட்டுவதற்கு இலை களைப் பயன்படுத்துதல், மூங்கில் நாற்காலிகளைப் பயன்படுத்துதல் போன்ற விழிப்புணர்வுகளைப் பொம்ம லாட்டத்தின் வழி நிகழ்த்திய கலைஞர்களுக்குப் பாராட்டுகள்.

**முடிவுரை:** கலைகள் போற்றுதலுக்கும் இரசிப்பதற்கும் உரியன. அக்கலையின் வாயிலாக மனிதனுக்கும் மண்ணுக்கும் கேடு விளைவிக்கும் செயல்களைச் செய்து காட்டுவது பாராட்டுதற்குரியது. ஆகவே, இந்த பொம்மலாட்ட கலையின் மூலமாகக் கூறியவற்றை நாம் பின்பற்றி, நம்மையும் நம் சமுதாயத்தையும் காக்க உறுதுணையாக இருப்போம்.

44.

அ) **முன்னுரை :** கிராமத்து மக்களின் விருந்தோம்பல் மனதிற்குள் எப்போதும் பசுமையாக இருக்கும். அவர்களது இயல்பான வரவேற்பும் எளிமையான உணவும் நமது மனதின் களைப்பையும் உடலின் களைப்பையும் மறக்கடிக்கச் செய்யும். இக்கதையில் இருப்பதை பகிர்ந்து கொடுக்கிற நேசம் அன்னமய்யாவிடம் காணப்படுகிறது. அவரின் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை இக்கதையில் காண்போம்.

**அன்னமய்யாவுடன் வந்த வாலிபன் :** அன்னமய்யாவுடன் வந்தவன் தாடியும் அழுக்கு ஆடையும் தள்ளாடிய நடையுடனும் காணப்பட்டான். அந்தப்பக்கம் வந்த அன்னமய்யா அவ்வாலிபனை அருகில் சென்று பார்த்தான். பசியால் வாடிய முகம், முதியவரைப் போலவும், சாமியாரைப் போலவும் காணப்பட்டான்.

**அன்னமய்யாவின் விசாரிப்பு :** அன்னமய்யாவைப் பார்த்து அவன் மென்மையாகச் சிரித்தான். அவன் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான். அவன் பேசியதில் மகிழ்ச்சியடைந்த அன்னமய்யா அருகிலிருந்து நீச்சுத் தண்ணி வாங்கி வந்து கொடுத்தான்.

**வாலிபனின் பசியைப் போக்கினான் :** ஒரு வேப்பமரத்தின் அடியில் ஏகப்பட்ட மண்கலயங்கள் கஞ்சியால் நிரப்பப்பட்டிருந்தன. சிரட்டையைத் துடைத்து அதில் நீத்துபாகத்தை அவனிடம் நீட்டினான். அக்கஞ்சியை உறிஞ்சியபோது அவனுக்குக் கண்கள் சொருகின. மிடறு தொண்டை வழியாக இறங்குவதன் சுகத்தை முகம் சொல்லியது. “உட்கார்ந்து குடிங்க” என்று உபசரித்தான். அவன் கஞ்சியைக் குடித்துவிட்டு வேப்பமரத்து நிழலில் உறங்கினான். வந்தவனின் மனநிறைவுக்கு மேலான ஒரு நிறைவு அன்னமய்யாவுக்கு ஏற்பட்டது. பால் குடித்துக் கொண்டிருக்கும் குழந்தையைப் பார்ப்பது போல அவனை ஒரு பிரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தான் அன்னமய்யா.

**அன்னமய்யா – பெயர்ப் பொருத்தம் :** தொலைவிலிருந்து வந்த அந்த வாலிபன் படுத்துக்கொண்டே உங்கள் பெயரென்ன?” என்று கேட்டான். அதற்கு உங்கள் பெயரென்ன என்று கேட்டதற்கு இவர் “அன்னமய்யா” என்று கூற, வந்தவன் அந்தப் பேரை மனதுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பார்த்துக் கொண்டான். எவ்வளவு பொருத்தம் என்று நினைத்துக் கொண்டான். எனக்கு இன்று நீ இடும் அன்னம் தான் இன்று என் உயிரைக் காப்பாற்றியது என்று அந்த வாலிபன் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

**முடிவுரை :** கரிசல் இலக்கியத்தின் தந்தை எனப் பாராட்டப்பட்ட கி.ராஜநாராயணன் எழுதிய இக்கதையில், அன்னமய்யா என்ற பெயருக்கும் அவரின் செயலுக்கும் சிறந்த பொருத்தமாக அமைந்துள்ளது என்பது உண்மை, நாமும் அன்னமய்யாவைப் போலப் பசியால் வாடுவோர்க்கு பசியைப் போக்க உதவுவோம்.

**அல்லது**

ஆ) **முன்னுரை :** துணையின்றி வாழும் நிலை இரங்கத்தக்கது. எப்படிப்பட்டவராக இருந்தாலும் பிறரது துணையைச் சார்ந் திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. துணையே இல்லாதவர் என்று கருதி நாம் அலட்சியம் செய்பவருக்கும் துணையொன்று இருப்பதை அறிய முடிகிறது. மனிதநேயம் மிக்க மனிதர்கள் எக்காலத்தும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த வகையில் கு.அழகிரிசாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ என்ற சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர்கள் குறித்துக் காண்போம்.

**வீரப்பன் :**

குப்புசாமியின் உயிர் நண்பன் வீரப்பன். வீரப்பன் கட்டட மேஸ்திரியாக கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளி. குப்புசாமி, தாய்மாமன் வீட்டில் தங்கியிருந்தபோது நோய் காரணமாக வேலையை இழந்துவிட்டான். தாய்மாமன் வீட்டில் அவனை சரியாகக் கவனிக்கவில்லை. அதனால் துன்பப்பட்ட குப்புசாமியை அழைத்து வந்து, சாப்பாடு போடுவான்.

குப்புசாமி காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு தன் சித்தி வீட்டிற்கு வந்த பின்பும் வீரப்பன் அவனை மறக்கவில்லை. சென்னைக்கு ஒரு வேலையாக வந்த ஆறுமுகத்திடம் ஒரு கடிதத்தையும் மூன்று ரூபாயையும் குப்புசாமிக்காக கொடுத்தனுப்புகிறான். அந்தக் கடிதத்தில் அவன் எழுதியிருந்த செய்திகள் வீரப்பனின் மனிதத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது.

அக்கடிதத்தில், குப்புசாமி ஊரைவிட்டு போனது தன் உயிரே போய்விட்டது போல இருந்தது என்று கூறுகிறான். மேலும் குப்புசாமிக்காக தினமும் கோயிலுக்குச் சென்று சாமி கும்பிடுவதாகவும் எழுதியிருந்தான். கடன் வாங்கி மூன்று ரூபாய் கொடுத்தனுப்பியுள்ளதாகவும், நேரில் வருவதைவிட, பஸ்ஸுக்கு ஆகும் செலவு குப்புசாமிக்கு உதவியாக இருக்கும் என்பதால் பணத்தைக் கொடுத்துவிட்டதாகவும் எழுதியுள்ளான். வேறு இடத்தில் கேட்டிருக்கும் கடன் தொகை கிடைத்தால் நேரில் பார்க்க வருவதாகவும் எழுதியிருந்தான். இக்கடிதம் வீரப்பனின் மனிதநேயத்தை மட்டும் வெளிப்படுத்தவில்லை. மனிதநேயம் இல்லாமல் இருந்த, தங்கவேலுவின் பக்கத்து வீட்டு நபரையும் மனம் மாறச் செய்தது.

**ஆறுமுகம் :**

குப்புசாமி வேலை செய்த சைக்கிள் கடைக்கு எதிரேயிருந்த விறகுக் கடை ஒன்றில் கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளிதான் ஆறுமுகம்.

வீரப்பன் அளவிற்கு குப்புசாமியிடம் நட்பு இல்லை என்றாலும் ஓரளவு அறிமுகம் ஆனவன்.

குப்புசாமியை மருத்துவமனையில் சேர்த்த செய்தியை அறிந்தவுடன், தன் பிள்ளைகளுக்காக வாங்கியிருந்த நான்கு சாத்துக்குடிப் பழங்களில் இரண்டையும், ஒரு ரூபாயையும் கொடுத்து குப்புசாமியிடம் சேர்த்துவிடச் சொன்னான்.

வீரப்பன் கொடுத்தவற்றை மட்டும் கொடுத்துவிட்டு போயிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்வதற்கு அவனுள் இருந்த மனிதநேயம் இடம் கொடுக்கவில்லை.

**முடிவுரை :** இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால், கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பை செலுத்த இயலும் என்று அன்னை தெரசா கூறியது போல வீரப்பன், ஆறுமுகம் ஆகிய இரு கதைமாந்தர்களிடம் மனிதம் வெளிப்பட்டு நிற்பதை இக்கதையின் வாயிலாக உணர முடிகிறது.

45.

அ) **முன்னுரை :** தமிழ் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமை வாழ்ந்த இலக்கிய, இலக்கண வளம் மிக்க மொழி. தமிழ் மிகவும் பண்பட்ட மொழி. தமிழ்மொழி வளர்ச்சிக்கு சான்றோர்கள் ஆற்றிய பங்கினை குறித்துப் பார்ப்போம்.

**தமிழன்னையின் அணிகலன்கள் :** தமிழ்மொழியில் உள்ள நீதிநூல்கள், பதினெண்மேல்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு, காப்பியங்கள், பள்ளு, குறவஞ்சி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்ற தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்கள் போன்றன தமிழன்னைக்கு அணிகலன்களாய் விளங்க பலரும் பணியாற்றியுள்ளனர்.

**தமிழ்ச் சான்றோர் :** ஏடு காத்த ஏந்தல்' என்ற சிறப்பிற்குரிய தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் உழைப்பாலும் தியாகத்தாலும் தமிழ் ஓலைச் சுவடிகளைத் தேடித் தொகுத்தார். அவை அனைத்தையும் பிழையின்றி தமிழுக்கு அச்சிட்டுத் தம் பதிப்புப் பணியினால் தமிழுக்கு உயிரூட்டினார்.

மிகச்சிறந்த தமிழறிஞரும் சொல்லாராய்ச்சி வல்லுநருமான தேவநேயப்பாவாணர், இலக்கணம், தமிழியல், மொழி ஆராய்ச்சி மொழிநூல், பண்பாடு போன்ற தளங்களில் 150-க்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் 40-க்கும் மேலான மிகச்சிறந்த நூல்களையும் படைத்துள்ளார். இவரின் அயராத உழைப்பினால் தமிழ் ஆழமாக வேரூன்றியது.

சாகித்திய அகாதமி விருது பெற்ற 20ஆம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழ் அறிஞருள் ஒருவரான மு.வரதராசன் இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், சிறுகதைகள், புதினங்கள், கடித இலக்கியம், நாடகம், சிறுவர் இலக்கியம் மொழிபெயர்ப்பு, இலக்கணம் போன்றவற்றில் ஏராளமான நூல்களை இயற்றியுள்ளார். தமிழ்த்தாய் மு.வ என்ற அறிஞரின் மூலம் முகவரி கொண்டாள் என்றே சொல்லலாம்.

**தமிழின் வளர்ச்சி :** காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்கள் பல்வேறு மாற்றங்கள் பெற்று இன்று நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன. பிற மொழியினரும் எளிதில் கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சான்றோர் வளர்த்த நம் தாய்மொழியாகிய தமிழ்மொழி இன்று செம்மொழியாக பெருமை பெற்றுத் திகழ்கிறது.

**முடிவுரை :** எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு என்று பறைசாற்றும் வரிகளைப் போல தமிழ் என்றும் மங்காது அதன் பெருமையும் புகழும் என்றும் குன்றாது. நம் தாய்மொழியின் பெருமையினை அறிந்து அதன் வளர்ச்சிக்காக நாம் ஒற்றுமையாக உழைக்க வேண்டும். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சூளுரை ஏற்போம். சன்றோர் வளர்த்த தமிழை நாமும் வளர்ந்து பெருமையடைய செய்வோம்.

**அல்லது**

ஆ) **முன்னுரை :**

ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்கள் மூலமாகவும் தொலைக்காட்சி வாயிலாகவும் சாலைவிபத்துகள் பற்றிய செய்திகளை நாம் அறியமுடிகிறது. சாலை விபத்துகளால் எண்ணற்ற உயிர்கள் பலியாகின்றன. பலர் உடலின் உறுப்புக்களை இழக்கின்றனர். இதற்கெல்லாம் சாலை-விதிகளை நாம் மதிக்காமல் நடப்பதே காரணமாகும்.

**சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு :**

**"தலைக்கவசம் நமக்கு உயிர்க்கவசம்"**

இரு சக்கர வாகன ஓட்டிகள் தவறாமல் தலைக்கவசம் போட்டுக் கொண்டு வாகனங்களை ஓட்ட வேண்டும். போக்குவரத்துக் காவல்துறையினரின் கட்டளையை மீறி நாம் செல்லக்கூடாது. வாகனங்களில் அதிவேகம் இருக்கக் கூடாது. வாகனம் ஓட்டுபவர்களுக்கென கூறப்பட்டுள்ள சாலைவிதிகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். சாலையில் அந்தந்த வாகனங்களுக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டி ஓட்டக் கூடாது. சாலையில் பாதுகாப்புடன் வாகனங்களை இயக்கி உயிர்பலியை தவிர்ப்போம்.

**சாலை விதிகள் :** சாலையில் விபத்துகள் நேரிடா வண்ணம் தடுப்பதற்காக, போக்குவரத்துக் காவல்துறையினர் பணிசெய்கின்றனர். மேலும் பல இடங்களில் வண்ண விளக்குகள் மூலமாக சாலை போக்குவரத்து நெறிப்படுத்தப்படுகிறது. போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும் போக்குவரத்துக் காவலர்களின் சாலை உத்தரவுகளுக்கும் ஏற்ப சாலையை பயன்படுத்த வேண்டும்.

**ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் :** சிவப்பு வண்ண விளக்கு 'நில்' என்ற கட்டளையையும் மஞ்சள் வண்ண விளக்கு 'தயாராக இரு' என்ற கட்டளையையும், பச்சை வண்ண விளக்கு 'புறப்படு' என்ற கட்டளையையும் நமக்குத் தருகிறது. இடது பக்கம் செல்லவேண்டும் என்பது சாலை விதிகளில் முக்கியமானதாகும். பாதசாரிகள், நடப்பதற்கான நடைமேடையில் செல்ல வேண்டும். எதிர்த்திசையில் சாலைகளைக் கடக்கும்பொழுது, அதற்கென கோடு போட்டிருக்கும் இடத்தில்தான் கடக்க வேண்டும்.

**விபத்தினைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் :**

இரு சக்கர வாகனங்களில் இருவருக்கு மேல் பயணிக்கக்கூடாது. பேருந்துகளில் பயணம் செய்யும் போது படிக்கட்டுகளில் நிற்கக் கூடாது. வண்டி ஓட்டுபவர்கள் உடல்நிலை, மனநிலை பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது, கண்டிப்பாக வண்டி ஓட்டக்கூடாது. மதுவருந்திவிட்டு வண்டி ஓட்டுதல் சட்டப்படி குற்றமாகும். எந்தவொரு வண்டியையும் முந்திச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் செல்லக்கூடாது.

**முடிவுரை :**

'உயிர் விலைமதிப்பற்றது' மனித உயிர் மட்டுமல்ல; பறவைகள், விலங்குகள் என்று அனைத்து உயிர்களுமே விலை மதிப்பற்றவை. சாலை விபத்தின் போது அந்த ஜீவன்களும் பாதிக்கப்படுகின்றன. எனவே சாலை விதிகளை நாம் பின்பற்றி நடக்க வேண்டும்.

"சாலை விதிகளை மதிப்போம்
விலை மதிப்பில்லா உயிரைக் காப்போம்."

☆☆☆